**செய்தி வெளியீடு எண்: 57/2026** **நாள்: 15.08.2026**

## பத்திரிகைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது

சென்னை, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் 80-வது சுதந்திர தின விழா இன்று (15.08.2026) கொண்டாடப்பட்டது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. மு. அ. சித்திக், இ.ஆ.ப., தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் இயந்திரமயமாக்கப்பட்ட தூய்மைப் பணிகளைப் பாராட்டும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு **"முதலமைச்சரின் நல்லாளுமை விருது"** வழங்கப்பட்டுள்ளது. இன்று (15.08.2026) சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ச. ஜோசப் விஜய்** அவர்களிடமிருந்து, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் பொது மேலாளர் திரு. எஸ். சதீஷ் பிரபு (செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு) மற்றும் செயல்பாடு குழுவினர் இவ்விருதைப் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், இவ்விருதினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. மு.அ. சித்திக், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கப்பட்டது. மெட்ரோ இரயில் நிலையங்களில் உயர்தர தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பராமரிக்க தூய்மைப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி, பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்திய சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முயற்சிகளுக்காக இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கேரம், சதுரங்கம், கிரிக்கெட், டேபிள் டென்னிஸ், பூப்பந்து, பிக்கிள்பால், கைப்பந்து, கோ-கோ மற்றும் சுறுசுறுப்பான நடை (Brisk Walk) ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 109 அலுவலர்கள் மற்றும்

பணியாளர்களுக்கும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக பணிபுரிந்த 6 அலுவலர்கள் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணிபுரிவோரின் பிள்ளைகளில் கடந்த கல்வியாண்டில் 80 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற 13 மாணவ, மாணவியர்களுக்கும், ஆகமொத்தம் 128 நபர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (நிதி), திரு. மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பொது ஆலோசக நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**